தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள்
முறைமன்ற நடுவர், சென்னை – 600 032.

முன்னிலை: மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப.(ஓ)

*******

ஆணை எண்.009/மா/2021

ஆணை நாள். 17.03.2021

திரு. A. தரணிதரன்,
403, 3வது மெயின் ரோடு,
T.N.H.B. ஆவடி, சென்னை–600 054.
ஆவடி மாநகராட்சி. – முறையீட்டு மனுதாரர்.

K. வைத்தியலிங்கம்,
பொறியாளர்.
ஆவடி மாநகராட்சி. – எதிர் மனுதாரர்கள்
M. சங்கர்,
உதவி பொறியாளர்.
ஆவடி மாநகராட்சி.

ஆவடி மாநகராட்சி எண். 403–3 வது மெயின் ரோடு, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் என்ற முகவரியில் வசிக்கும் திரு A. தரணிதரன் அவர்களின் 16.03.2020 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு 009/2021 எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை.

ஆவடி மாநகராட்சி எண். 403,– 3வது மெயின் ரோடு, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் என்ற முகவரியில் வசிக்கும் A. தரணிதரன் என்பவர் ஆவடி மாநகராட்சி 18–வது வார்டு ஆவடி வீட்டு வசதி வாரியம் 2–வது செக்டார், 6–வது பிளாக்கில் உள்ள சாலையில் ( 8 அடி அகலம் 5 அடி ஆழத்திற்கு பள்ளம் ) உள்ள திறந்த வெளிக்கல்வாயை மூடி கான்கிரீட் சாலை அமைக்காததால் பல விபத்துக்கள் நடப்பதாக தெரிவித்து பள்ளி சுவரை ஒட்டியுள்ள மண் மேட்டை சரி செய்யவும், இதற்கு காரணமான சம்மந்தப்பட்ட அதிகாரிகளின் மீது உரிய நடவடிக்கை எடுக்கவும் இம்முறை மன்றத்தில் முறையீடு செய்துள்ளார்.

2) இம்மனு குறித்து முறையீட்டு மனுதாரர், ஆவடி மாநகராட்சி பொறியாளர் திரு.K. வைத்தியலிங்கம், உதவி செயற்பொறியாளர், திரு. M. சங்கர், ஆகியோர்களிடம் 17.02.2021 அன்று நேரடி விசாரணை மேற்கொள்ளும் பொருட்டு அழைப்பாணை அனுப்பப்பட்டது. ஆனால் 17.02.2021 அன்றைய நேரடி விசாரணைக்கு மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் வருகை தரவில்லை. ஆவடி மாநகராட்சி ஆணையாளருக்கு இம்முறை மன்ற நடுவக்கடிதம் எண். 355/மா/2020–3, நாள். 23.02.2021 – ன்படி 17.02.2021 அன்றைய விசராணைக்கு உரிய காரணம் தெரிவிக்காமல் வராமலிருந்த பொறியாளர் மற்றும் உதவி செயற்பொறியாளருக்கு கண்டனம் தெரிவிக்கப்பட்டு உரிய அறிக்கை அனுப்புமாறு கோரப்பட்டது.

3) ஆவடி மாநகராட்சி ஆணையாளர் இந்நேர்வு குறித்து 17.02.2021அன்று நடைபெற்ற விசாரணைக்கு வர இயலாமைக்கான காரணத்தை தெரிவித்து 08.03.2021–ல் தமது அறிக்கையை சமர்ப்பித்துள்ளார். ஆணையாளரின் அறிக்கையில் ஆவடி தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், 6–வது பிளாக்கில் இருக்கும் நாசரேத் பள்ளி அனக்ஸ் அருகில் உள்ள கால்வாயை மூடி அமைக்க ரூ.24.00 இலட்சத்தில் மதிப்பீடு தயார் செய்து மாமன்றம் ஒப்புதல் பெறப்பட்டு 31.12.2020–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. இப்பணிக்கு 04.01.2021–ல் பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. மேலும் மனுதாரர் மனுவில்

தெரிவித்துள்ள குறைகள் மற்றும் ரோட்டில் உள்ள பள்ளங்கள் முற்றிலும் மூடப்பட்டுள்ளது என்ற விவரத்தினை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

4) மனுதாரரின் மனு மற்றும் ஆவடி மாநகராட்சி ஆணையாளரின் அறிக்கை கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. ஆணையாளர் தமது 08.03.2021 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் மனுவில் குறிப்பிட்டுள்ள குறைகள் மற்றும் ரோட்டில் உள்ள பள்ளங்கள் முற்றிலும் மூடப்பட்டு சரி செய்யப்பட்டுள்ளன என்று தெரிவித்துள்ளார். இந்நிலையில் ஆணையாளரின் அறிக்கையினை ஏற்று முறையீட்டு மனுதாரின் முறையீட்டினை இத்துடன் முடித்து வைக்கலாம் என முடிவு செய்து அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2021–ஆம் ஆண்டு, மார்ச்சு திங்கள் 17–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

/ஆணைப்படி/அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1) திரு.A.தரணிதரன்,
403– 3வது பிரதான சாலை,
தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்,
ஆவடி நகராட்சி, சென்னை – 600 054.
2) திரு கே.வைத்தியலிங்கம்,
பொறியாளர், ஆவடி மாநகராட்சி,
ஆவடி, சென்னை – 600 054.
3) திரு. எம். சங்கர்,
உதவி செயற்பொறியாளர்,
ஆவடி மாநகராட்சி,
ஆவடி, சென்னை – 600 054.

நகல். முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்.
இகோ/உதிரிகள்.